# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.218/2024</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமராவதி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கைநகல் ம.சா.ஆ.1, என்கணவரின் பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.2, என்கணவரின் இறப்புசான்றுநகல் ம.சா.ஆ.3, வாரிசுசான்றுநகல் ம.சா.ஆ.4, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடுசான்றுநகல் ம.சா.ஆ.5,

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்து நடந்தசாலை திருச்சி – சென்னை தேசியநெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகு சாலை என்றால் சரிதான். என்கணவர் முன்னால் சென்றுவிட்டார் நான் பின்னால் சென்றேன். அந்தநேரத்தில் அதிகமாக வாகனங்கள் இயங்கவில்லை. என்கணவர் கார் வருவதை கவனிக்காமல் சாலையை குறுக்கே நடந்ததால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. என்மகன்களுக்கு திருமணம் ஆகி தனித்தனியாக குடித்தனம் செய்கிறார்கள் என்றால் சரிதான். என்கணவர் இறக்கும்போது 75 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல. என்கணவருக்கு ஆதார்அட்டை உள்ளது. விபத்து

சமயத்தில் கார் ஓட்டுநர் கவனமாகவும், மெதுவாகவும் தான் காரை ஓட்டிவந்தார் என்றும், என்கணவர் தான் கவனக்குறைவாக சாலையை கடந்து விபத்து வரவழைத்தார் என்றால் சரியல்ல. என்கணவர் மாதம் ரூ.12000/- வருமானம் ஈட்டவில்லை என்றும், என்மகன்களின் வருமானத்தை வைத்துதான் வாழ்க்கை நடத்திவந்தார் என்றால் சரியல்ல. என்மனு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.